முதன்மை மாவட்ட நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.

O.S. No. 69 / 2018

12.03.2019

வா.சா.2 : பெயர் : ராஜா (எ) பாடலீஸ்வரன், த-பெ. ரெத்தினம்

மேற்படி சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டு
பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :

வாதி அருணகிரி எனக்கு சகலை மகன் ஆவார். நான் ஆப்டிக்கல்ஸ் கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். நான் ஜோசப் கண் ஆஸ்பத்திரியில் மேற்படி கடை வைத்து நடத்தி வருகிறேன். பிரதிவாதி ராஜாவுக்கும், எனக்கும் கடந்த 20 வருடங்களாக பழக்கம் உள்ளது. அவர் எனக்கு நெருங்கிய பழக்கம் உடையவர். வா.சா.ஆ.1 ன் முத்திரை தாளை பிரதிவாதி தான் வாங்கி வந்தார், அது எந்த தேதியில் வாங்கப்பட்டது என்பது எனக்கு தெரியாது. 15.3.2013 அன்று வா.சா.ஆ.1 ஆன கிரய ஒப்பந்த உடன்படிக்கை என்று சொல்லப்படும் ஆவணமானது ஏற்பட்டது. அன்றைய தேதியிலேயே மேற்படி ஆவணத்தில் பிரதிவாதி ராஜா தட்டச்சு செய்து எடுத்து வந்தார். இன்றைய தேதியில் எனக்கும், பிரதிவாதி ராஜாவுக்கும் பழக்க வழக்கம் கிடையாது. வா.சா.ஆ.1 ஆன கிரய ஒப்பந்த உடன்படிக்கை என்று சொல்லப்படும் ஆவணத்தை பதிவு செய்யாததற்கு நான்தான் காரணமா என்றால் இல்லை. அருணகிரிக்கு நேரடியாக பிரதிவாதி ராஜாவை தெரியாது. பிரதிவாதி ராஜா தாவாக்கு சம்பந்தப்பட்ட சொத்தான கிரயம் செய்ய போவதான விவரம் வாதி எப்படி தெரிந்து கொண்டார் என்றால் என் மூலமாக தெரிந்து கொண்டார். பிரதிவாதி கடன் நெருக்கடியில் இருந்தார் என்ற விவரம் அருணகிரிக்கு தெரியுமா என்றால் தெரியாது. என்னுடைய முதல் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளை நான் வழக்கறிஞருக்கு சொல்லி, அதை வழக்கறிஞர் தயார் செய்தார். என்னுடைய முதல் பிரமாண வாக்குமூலத்தில் பிரதிவாதி கடன் நெருக்கடியில் இருக்கிற விவரம் அருணகிரிக்கு தெரியாது என்று இன்று சொல்லும் விவரம் சொல்லவில்லை. தாவா உடன்படிக்கை ஆவணம் எத்தனை மணிக்கு எந்த இடத்தில் வைத்து எழுதப்பட்டது என்றால் பிரதிவாதி ஆவணத்தை டைப் செய்து கொண்டு வந்தார்,

அதில் நான் என்னுடைய கடையில் வைத்து கையொப்பம் செய்தேன். அருணகிரி சுமார் 15 வருடங்களாக நிலத்தை வாங்கி, விற்கும் தொழில் செய்து வந்தாரா என்றால் 15 வருடங்கள் கிடையாது, சுமார் 5 வருடங்களாக அந்த தொழிலை செய்து வருகிறார். 2013 லும் அருணகிரி விவசாயம் மற்றும் நிலத்தை வாங்கி விற்கும் தொழில் செய்து வந்தார். தாவா தாக்கல் செய்யும்போது தாவாவுக்குண்டான விசயங்களை நானும், வாதி அருணகிரியும் வழக்கறிஞரை சந்தித்து சொன்னோமா என்றால் நான் சொல்லவில்லை, அருணகிரி தான் சொன்னார். பிரதிவாதி, திருச்சியில் நிலம் வாங்க உத்தேசித்திருப்பதாக யார் எனக்கு சொன்னார்கள் என்றால் ராஜா தான் திருச்சியில் நிலம் வாங்கியிருப்பதாக என்னிடம் சொன்னார். பிரதிவாதி ராஜா பைனான்சில் கடன் வாங்கியிருக்கும் விவரத்தை எனக்கு ராஜா தான் சொன்னார். அவருடைய நண்பர் வைத்திருக்கும் அம்மன் பைனான்சில் கடன் வாங்கியதாக சொன்னார். வா.சா.ஆ.1 ல் எத்தனை நபர்கள் சாட்சிகளாக கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் நானும், ஜமீல் உசேனும் சாட்சிகளாக கையொப்பம் செய்துள்ளோம். நாங்கள் இருவரும் பிரதிவாதி ராஜா கையொப்பம் செய்ததை நேரில் பார்த்தோம். என் முன்னால் ராஜா கையொப்பம் எதுவும் செய்யவில்லை என்றாலும், நான் தவறாக என் முன்னால் ராஜா கையொப்பம் செய்தார் என்று சொல்கிறேன் என்று சொன்னாலும் சரியல்ல. என் கடையில் வைத்துதான் ராஜா வா.சா.ஆ.1 ல் கையொப்பம் செய்தார். வா.சா.ஆ.1 ஐ படித்து பார்த்தேனா என்றால் நான் படித்து பார்த்தேன். இன்னொரு சாட்சியான ஜமீல் உசேனை பிரதிவாதி அழைத்து வந்தார். வா.சா.ஆ.1 ஆன உடன்படிக்கையில் சொல்லப்பட்டுள்ள சொத்தின் பழைய சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ.1 ஏற்பட்ட ஒரு மாத காலத்திற்குள்ளேயே இந்த சொத்துக்குண்டான மூல பத்திரத்தை பிரதிவாதி கொடுத்தாரா என்றால் வா.சா.ஆ.1 ஐ மட்டும்தான் கொடுத்தார். வா.சா.ஆ.1 ல் சொல்லப்பட்டுள்ள சொத்தின் புதிய சர்வே எண் எனக்கு தெரியாது. மேற்படி சொத்தின் நான்கெல்லைகள் எனக்கு தெரியாது. பொதுவாக பத்திரத்தை படித்து பார்த்துவிட்டு தான் கையொப்பம் செய்வது வழக்கம். அவ்வாறு நான் படித்து பார்த்திருந்தால் அதை பத்திரத்தில் சொல்லியிருப்பார்கள் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. நான் வா.சா.ஆ.1 பத்திரத்தை படித்து பார்க்கவில்லை என்பதால்தான் எனக்கு தெரியாது என்று சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி வா.சா.ஆ.1 ன் படி பெற்ற கிரய முன்தொகையை வைத்து தன்னுடைய கடன்களை செலுத்தி குறைத்து கொண்டாரா என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. பிரதிவாதி கிரய முன்தொகையை பெற்று தன்னுடைய கடன் தொகையை குறைத்து கொண்டேன்

என்று என்னிடம் சொன்னார். இந்த விவரத்தை நான் எனது முதல் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை. எந்தெந்த கடன்கள் பிரதிவாதிக்கு இருந்தது என்பது எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 க்குண்டான முன் தொகையை வாதி, D.D.யாக கொடுத்தாரா அல்லது பணமாக கொடுத்தாரா என்றால் பணமாக கொடுத்தார். பணம் கொடுத்ததை நான் நேரில் பார்த்தேன். இந்த விவரம் வா.சா.ஆ.1 ல் சொல்லப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். வாதி அருணகிரியின் தந்தை, அவர் குடும்ப உறுப்பினர்களுக்கிடையே உரிமையியல் வழக்கு நிலுவையில் உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியும். அம்மன் பைனான்ஸ் குறித்த விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது. தாவாவில் என்ன பரிகாரம் வாதி கேட்டுள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியாது. இந்த தாவா சொத்து சம்பந்தமாக குற்ற வழக்கு என்மீது உள்ளதா என்றால் ஒரு வழக்கு உள்ளது. அந்த வழக்கு சம்பந்தமாக என்னை 10 நாட்கள் நீதிமன்ற காவலில் வைத்திருந்தார்கள். வா.சா.ஆ.1 ஆன போலியாக தயார் செய்யப்பட்டதாக கோரி என்மீது வழக்கு பதியப்பட்டதா என்றால் என்மீதும், வாதி மீதும், மற்றொரு ஜமீல் உசேன் மீதும் வழக்கு பதியப்பட்டிருந்தது. வா.சா.ஆ.1 ல் சாட்சிகள் எழுதப்பட்ட கையெழுத்து என்னுடைய கையெழுத்து கிடையாது. அந்த வார்த்தையை ராஜா தான் எழுதினார். வா.சா.ஆ.1 ல் அருணகிரியும், ராஜாவும் கையெழுத்து செய்துள்ள இடத்தில் இரண்டு வரிகள் எழுதுவதற்குண்டான இடைவெளி உள்ளது என்றால் உள்ளது. இந்த வழக்கு குறித்து அருணகிரிக்கு நான் தகவல் ஏதும் சொல்லவில்லை. பிரதிவாதிக்கும் எனக்கும் இருந்த நட்பை தவறாக பயன்படுத்தி வா.சா.ஆ.1 ஐ நான் தயார் செய்தேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த காரணத்தினால் தான் எனது அண்ணன் மகனை வைத்து நான் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. வாதி அருணகிரி பிரதிவாதி ராஜாவிற்கு வா.சா.ஆ.1 ன் படி ரூ.13,00,000 ஐ முன்தொகையாக கொடுத்துள்ளார். அவ்வாறு முன் தொகை எதுவும் கொடுக்கப்படவில்லை என்று சொன்னால் அது தவறு. பைனான்சில் கொடுத்து வைத்திருந்த பிரதிவாதியின் பத்திரத்தை வாங்கி, நான், ஜமீல் உசேன் மற்றும் வாதி ஆகியோர் சேர்ந்து கிரய ஒப்பந்த உடன்படிக்கை ஆவணமாக தயார் செய்து கொண்டோம் என்று சொன்னால் சரியல்ல. இந்த தாவா சொத்து சம்பந்தமாக வாதி பெயரில் உரிமையியல் வழக்கு தொடர்ந்துள்ளார். அந்த வழக்கு தள்ளுபடியாகிவிட்டது. அந்த வழக்கானது வாதியின் வருகையின்மையால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள விசயங்கள் அனைத்தும், வாதி தாக்கல் செய்துள்ள பிராதில் எதுவுமே சொல்லப்படவில்லை என்று சொன்னால் அந்த விவரம் எனக்கு தெரியாது. எனது முதல் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளதுபோல்

எந்தவித சம்பவங்களும் நடைபெறவில்லை என்றாலும், என்னுடைய சாட்சி ஏற்றுக் கொள்ளகூடியதல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.